BOC கான்தா ரண் கினும்

உற்பத்தியின் தன்மை	வாடிக்கையாளருக்கான நன்மைகள்	ஆரம்ப வைப்பும் கட்டணங்களும்	கணக்கைத் திறப்பதற்கு பின்பற்ற வேண்டிய நடைமுறைகள்	முக்கிய விதிமுறைகளும் நிபந்தனைகளும்
பெண்களுக்கான சேமிப்புக் கணக்கு	1. வட்டி வீதம் 0.5% சாதாரண வட்டி வீதத்தை விட அதிகம் https://www.boc.lk/rates-tariff#general என்ற இணைப்பினூடாக கட்டணத்தை அறிந்துகொள்ளலாம். 1. **ஆயுள்/ நிரந்தர உடற் உபாதை காப்புறுதிக் காப்பீடு** குறைந்தபட்ச கணக்கு மிதியின் 10 மடங்கு (அதிகபட்சம் ரூ. 500,000) **தகுதி:** சம்பவம் இடம்பெற்ற திகதிக்கு முன்பிருந்து உடனே ஆறு மாதங்களுக்கு குறைந்தபட்ச மிகுதியாக 10,000/- ரூபாயைப் பேணியிருக்க வேண்டும். 1. **அடகு வைக்கும் வசதிகளுக்கான சலுகை வட்டி வீதம்** பட்டியலிடப்பட்ட வீதத்திலிருந்து ஆண்டுக்கு 0.5% சலுகை 1. **மோட்டார் கார்களை வாங்குவதற்கான குத்தகை வசதிகளுக்கான சலுகை வட்டி வீதம்** ஆண்டுக்கு 0.5% என்ற வீதத்திலான பட்டியலிடப்பட்ட வட்டி வீதத்தை விட குறைவானது (8 மார்ச் 2022 முதல் 7 மார்ச் 2025 வரை பொருந்தும்) **தகுதி:** கடந்த 06 மாதங்களில் குறைந்தபட்ச மிகுதியாக 25,000/- ரூபாயைப் பேணியுள்ள KRG கணக்குகள் **கிரடிட் அட்டை வசதிகளுக்கு இணைவதற்கு கட்டணமில்லை.** முதன்மை அட்டைதாரருக்கு 100% கழிவு (8 மார்ச் 2022 முதல் 7 மார்ச் 2025 வரை பொருந்தும்) **தகுதி:** கோரும்போதுதொடர்ந்தும் 06 மாதங்களில் குறைந்தபட்ச மிகுதியாக 10,000/- ரூபாயைப் பேணியுள்ள KRG கணக்குரிமையாளர்கள்	1. **ஆரம்ப வைப்பு 500/- ரூபாய்** 2. கணக்கின் ஆகக்குறைந்த மாதாந்த சராசரி மிகுதியானது 500/- ரூபாய்க்கும் குறைவாயின் ஒவ்வொரு மாதமும் 35/- ரூபாய் கட்டணமாக அறவிடப்படும். 3. **கணக்கை முடிவுறுத்தும் கட்டணம் 500/- ரூபாய்** 4. **கணக்கு பேணுகையும் பிற கட்டணங்களும்** -கணக்கை முடிவுறுத்தும் கட்டணம் -ஏடிஎம் அட்டை வழங்குதல் -விவரக் கூற்றுகள் -நகல் கணக்குப் புத்தகம் வழங்குதல் -கணக்கு மிகுதியை உறுதிப்படுத்துதல் -நிலையியற் கட்டளை பதிவும் நிதி பரிமாற்றங்களும் -SMS தகவல் கட்டணங்கள் -ATM பணம் மீளப்பெறல் எல்லை மாற்றங்கள் -இணைய வங்கிச் சேவை கட்டணங்கள் https://www.boc.lk/rates-tariff#general என்ற இணைப்பினூடாக கட்டணத்தை அறிந்துகொள்ளலாம். 5. **வரிகள்-** வட்டியானது அரசாங்கத்தின் மற்றும் அல்லது இலங்கை ஒழுங்குமுறை ஆணையத்தின் அல்லது இலங்கை வங்கியின் அவ்வப்போதான தேவைகளுக்கேற்ப பொருத்தமான முற்பண வருமான வரி, ஏனைய வரிகள் (AIT), கட்டணங்கள் (ஏதேனும் இருப்பின்) மற்றும் நியதிச் சட்ட தீர்வைகள் என்பவற்றின் கழிவுகளுக்கு உட்பட்டதாகும்.	1. இலங்கையில் வதியும் 18 வயதுக்கும் மேற்பட்ட பெண்கள் இக்கணக்கை திறக்கலாம். 1. கூட்டுக் கணக்குகளைத் திறக்கலாம். கணக்கைத் திறக்கும் அனைவரும் பெண்களாக இருக்க வேண்டும். **கணக்கைத் திறப்பதற்கு பின்பற்ற வேண்டிய நடைமுறைகள்** 1. சேமிப்பு கணக்குகளுக்கான வங்கியின் நிலையான கணக்கு திறப்பு படிவங்களை பூர்த்தி செய்து பின்வரும் ஆவணங்களுடன் எந்தவொரு கிளையிலும் சமர்ப்பிக்கலாம். -தேசிய அடையாள அட்டை அல்லது தேசிய அடையாள அட்டை இலக்கம் குறிப்பிடப்பட்ட செல்லுபடியாகும் கடவுச்சீட்டு -குறிப்பிடப்படும் முகவரியானது தேசிய அடையாள அட்டையிலிருந்து வேறுபடுமாயின் முகவரி சரிபார்ப்பு ஆவணங்கள் -விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள நிரந்தர முகவரியானது குறித்த கிளையிலிருந்து வெகு தொலைவில் இருக்குமாயின் வாடிக்கையாளர் அக்கிளையில் கணக்கைத் திறப்பதற்கான தகுந்த காரணம்	-கணக்கின் சிறப்புப் பலன்களைப் (காப்புறுதி, பரிசுகள், புலமைப் பரிசுகள்) பெறுவதற்கு கணக்குரிமையாளர் கணக்கு மிகுதி, வைப்பு மற்றும் வயதெல்லை போன்ற வங்கி அவ்வப்போது முடிவு செய்கின்றன தகுதி அளவுகோள்களை பூர்த்தி செய்யவேண்டும். -காப்புறுதி நன்மைகளை கோரும்போது கணக்குரிமையாளர் 60 வயதிற்கு குறைவானவராக இருத்தல் வேண்டும். -இவ்வுற்பத்தியுடன் தொடர்புடைய நிபந்தனைகள் மற்றும் விதிமுறைகளை கணக்குத் திறப்பு விண்ணப்பத்தில் அறிந்துகொள்ளலாம். -

வைப்புக் காப்புறுதி காப்பீடு/அங்கீகரிக்கப்படாத (தவறான) பரிவர்த்தனைகளை அறிக்கையிடல் / செயலற்ற கணக்குகள்

- ஒரு வைப்பாளருக்கு ஆகக்கூடியது 1,100,000/- ரூபாய் இழப்பீட்டுக்குப் பொருந்தக்கூடிய காப்பீடினை செலுத்துவதற்காக நாணயச் சபையினால் நடைமுறைப்படுத்தப்பட்ட இலங்கை வைப்புத்தொகை காப்புறுதித் திட்டத்தில் வைப்புப் பொறுப்புகள் காப்புறுதி செய்யப்பட்டுள்ளன.
- அங்கீகரிக்கப்படாத/தவறான பரிவர்த்தனைகளை கண்டறியும்போது அவற்றை உடனடியாக வங்கிக்கோ அல்லது கணக்கினைப் பேணும் கிளைக்கோ அறிவிக்க வேண்டும்
- ஒரு (01) வருட காலத்திற்கு எவ்விதப் பண மீளப்பெறலும்/கொடுப்பனவுமின்றி கணக்கு செயற்படுத்தப்படாமல் இருந்தால், அவ்வருடத்தின் நிறைவின்போது கணக்கு 'செயலற்றதாக' மாறும்.
- அத்தகைய கணக்குகள் 10 ஆண்டுகளுக்கும் மேலாக செயற்படுத்தப்பட்டதற்கான ஆதாரம் ஏதும் இல்லை எனில் அந்தக் கணக்குகளில் உள்ள நிதி கைவிடப்பட்ட சொத்தாக இலங்கை மத்திய வங்கிக்கு மாற்றப்படும்

உங்களது கருத்தை எம்முடன் பகிர்ந்து கொள்ளுங்கள்

- வாடிக்கையாளர்கள் பின்வரும் எந்தவொரு தெரிவுகள் ஊடாகவும் தங்களது கருத்துக்களையும் முறைபாடுகளையும் பகிர்ந்து கொள்ளலாம்.

- உங்களது பாராட்டுகளையும் முறைபாடுகளையும் எமது வாடிக்கையாளர் அனுபவ மேலாண்மைப் பிரிவின் ஊடாக பதிவு செய்யலாம். உங்களது கோரிக்கைகள் தானியங்கி முறைமை மூலம் முன்னுரிமையுடன் கருத்திற்கொள்ளப்படும்.

தொலைபேசி: +94 11 220 4750 / +94 11 243 5814 தொலை நகல் : +94 11 243 5815 மின்னஞ்சல்: bocexmgt@boc.lk வலைத்தளம்: https://www.boc.lk

பதவிநிலை: வாடிக்கையாளர் அனுபவ முகாமையாளர், 22வது மாடி, இலங்கை வங்கிச் சதுக்கம், இல. 1, இலங்கை வங்கி மாவத்தை, கொழும்பு 01.

எமது எந்தவொரு கிளையையும், சேவை பிரிவையும் அல்லது அழைப்பு மையத்தை தொடர்பு கொள்ளுங்கள்.

எமது உற்பத்திகள் அல்லது சேவைகள் பற்றிய உங்களது கருத்துகளை/விசாரணைகளை எமது கிளைகளுக்கோ அல்லது தொடர்பு மையத்திற்கோ அறிவிக்கலாம். உங்களுக்கு அருகிலுள்ள கிளையை 1975 என்ற எண்ணூடாக (அழைப்பு மையம்) அறிந்துகொள்ளலாம்.